
# திராணி

2015



தி/ இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தர மாணவர் ஒன்றியம்

## 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாக்கியம்

## கல்வி, ஒழுக்கம், தூய்மை

### தூர நோக்கு

ஒழுக்கசீலமும், சமய கலாசார விழுமியங்களை மதித்து நவீன உலகை நம்பிக்கையுடன் எதிர் கொள்ளத் தேவையான தேர்ச்சியும், ஆளுமையும், பொறுப்புணர்ச்சியும் உள்ளவர்களாக மாணவர் சமூகத்தை வளப்படுத்தல்.

### VISION

INCULCATING THE STUDENT WITH A SENSE OF MORALITY, RESPECT FOR CULTURAL AND RELIGIOUS VALUES AND RESPONSIBILITY THEREBY DEVELOPING HIS PERSONALITY TO MAKE HIM FACE THE MODERN WORLD WITH CONFIDENCE

### பணிக்கூற்று

கல்வி, ஒழுக்கம், தூய்மை எனும் உயர் இலட்சியங்களுடன் தன்னம்பிக்கையும், ஆற்றலும், சமூக உணர்வு கொண்ட முழு ஆளுமை உள்ளவர்களாக மாணவர்களை உருவாக்க கல்லூரியினதும் சமூகத்தினதும் வளங்களை ஒருங்கிணைத்து அரும்பணிக்கான அர்ப்பணிப்பு.

### MISSION

MAKING THE BEST USE OF THE RESOURSE AT THE DISPOSAL OF BOTH THE COLLEGE COMMUNITY AND THE COMMUNITY OUTSIDE WITH A SENSE OF DEDICATION TOWARDS HELPING THE STUDENT TO MOULD HIS PERSONALITY THROUGH ERUDITION, MORAL SOUNDNESS AND PURITY AT HEART AND HIS ABILITY TO BUILD UP SOCIAL AWARNESS AND SELF- CONFIDENCE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே ஸ்ரீ
கோணேஸ்லரா இந்துக்கல்லூரி வாழ்கவே

ஆதி அந்தம் இல்லாத ஆண்டவன் தெய்வம்
அன்னையும் பிதாவும் எங்கள் முன்னறி தெய்வம்
எண்ணோடு எழுத்தையும் ஈபவர் தெய்வம் இனி
என்றுமவரையே பணிந்து இனிது வாழுவோம்

(வாழ்க)

நல்ல உள்ளம் வளர்ப்போம் உடல் உறுதி வளர்ப்போம்
கலை கல்வி வளர்ப்போம் தூய செல்வம் வளர்ப்போம்
நல்லவரை நாடி நிதம் நல்வழி நிற்போம் எங்கள்
நாட்டினிற்கே சேவை செய்து நாமும் வாழுவோம்

(வாழ்க)

முத்தமிழும் கற்று வேலை வித்தையும் கற்போம் உயர்
சத்தியமும் ஐக்கியமும் வாழ்விலமைப்போம்
வித்தை தரும் கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின்
உத்தமராம் ஆசிரியர் தமைப் பணிவோம்

(வாழ்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச்செய்தி

தி/இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் க.பொ.த (உ/த) மாணவர் ஒன்றியத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படுகின்ற மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வின் பிரதிபலனாக அவர்களது ஒற்றுமை, கூட்டுணர்வு முயற்சியின் அயராத உழைப்பில் வெளிவருகின்றதும், வருடாந்தம் பாடசாலையினை விட்டு வெளியேறும் மாணவர்களின் ஞாபக சின்னமாகவும் வெளிவருகின்ற "திராணி" சஞ்சிகைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும் உவகை கொள்கிறேன்.

அது மட்டுமல்ல இந்த நிகழ்வானது கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றிக்கடன் கூறுகின்ற வகையில் பரீட்சைக்கு தோற்றவிருக்கின்ற கலை, வர்த்தக, கணிதப் பிரிவுமாணவர்கள் ஆசிரியர்கள், அதிபர் மற்றும் பெரியவர்களிடம் ஆசி பெறுகின்ற நிகழ்வாகவும் அமைகின்றது.

நிகழ்விற்கும் சஞ்சிகை வெளியீட்டிற்கும் மீண்டும் எனது வாழ்த்துக்கள்.

ந.விஜேந்திரன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்விஅலுவலகம்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

எமது கல்லூரியின் க.பொ.த உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் 3 வது தடவையாக வெளிவரும் **"திராணி"** சஞ்சிகைக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.
இக்கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியம் சகல பிரிவுகளிலும் கற்கும் மாணவர்களது இயலுமை, தொடர்பாடல், துறைசார் விடயத்தேடல் புரிந்துணர்வு போன்றவற்றை விருத்தியாக்கும் வகையில் செயற்பட்டு வருகிறது . எனினும் கடந்த காலங்களில் இம்மன்ற செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டு மாணவர்களது ஆக்கத்திறன், இலட்சியப்படைப்புக்கள், திறன்சார் விருத்திகளையும் தமது நினைவுகளையும், பதிவாக உருவாக்க வேண்டும் என்ற வகையில் பாடசாலை மட்ட சஞ்சிகை பாடசாலை சஞ்சிகையான உள்ளக்கமலம் என்பவற்றுக்கு மேலாக உயர்தரத்தில் கற்கும் மாணவர்களது உணர்வுகளுக்கும் மதிப்பளித்து இத்திராணி சஞ்சிகை வெளிவருகின்றது.

ஒவ்வொரு வருடமும் உயர்தர மாணவர் ஒன்று கூடலின் போது திராணி வெளியிடப்படல் வேண்டும் என்பதும் மேலும் பலர் எழுத, தங்களது திறமைகளை படைக்க, இத் திராணி உதவ வேண்டும் என்பதும் எதிர்ப்பார்பாகும். "கற்கக்கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்று வள்ளுவர் கூறியது போன்று க.பொ.த உயர்தர மாணவர்களாகிய நீங்கள் வாழவேண்டும் என வாழ்த்துவதுடன் இம் மன்றத்தை வழிப்படுத்தும் ஆசிரியர்கள் மற்றும் உயர்தர மாணவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளை பாராட்டுவதுடன் எதிர்காலத்தில் திராணி மேலும் பல செய்திகளை சொல்ல வேண்டும் எனக் கூறி உங்களது உயர்வான பெறுபேறுகளுக்கு மனதார வாழ்த்துகின்றேன்.

கல்விச்சேவையிலுள்ள
திரு.செ.பத்மசீலன்
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமலை என பாடல் பெற்ற திருகோணமலையில் உள்ள முன்னனி பாடசாலை ஆகிய ஸ்ரீ. கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் உயர்தர மாணவர்களின் (2015) ஒன்று கூடல் நிகழ்வை ஒட்டி வெளியிடப்படும் "திராணி" சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன் .

கல்வியானது மனித வாழ்க்கையில் வளர்ச்சியையும் உயர்ச்சியையும் அடையச் செய்கிறது . அந்த வகையில் இந்துக் கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தொடர்ச்சியாக வெவ்வேறு துறைகளிலிருந்து சென்று கொண்டு இருக்கிறார்கள் . பல சாதனைகளை நிலை நாட்டியுள்ளார்கள் . 2015 மாணவர்களும் இச் சாதனைகளை நிலை நாட்ட வேண்டுமென வாழ்த்துகிறேன்.

திரு. நா. ஜெகன்மோகன்
பகுதித் தலைவர்
கணிதம்/விஞ்ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கிழக்கு மாகாணத்தில் முன்னனிக் கல்வி நிறுவனங்களில் ஒன்றாக திகழும் தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் உயர் தர வகுப்பு மாணவர்களின் (2015) ஒன்று கூடல் நிகழ்வையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சீரான வகுப்பறைக் கல்வி நடவடிக்கைகள் மாத்திரமே ஒரு பாடசாலையின் அடிப்படையாக அமைந்துவிடுவதில்லை. கலைத்திட்டச் செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லும் அப்பாடசாலைக்கு சமூகத்தில் நல்ல பெயர் கிடைக்கும்.

இக்கல்லூரி உயர்தர பெறுபேறுகளிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கி சாதனைகள் பல நிகழ்த்த வேண்டுமென வாழ்த்துவதுடன் மலர் நீடுழிகாலம் வாழ வளர எனது வாழ்த்துக்கள்

ந.ரகுமோகன்
பகுதித்தலைவர்
(கலை/ வர்த்தகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த கணித விஞ்ஞானப்பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர் குழாம்

திரு.N. ஜெகன்மோகன் (பகுதித் தலைவர்)
திரு.S. சிவயோகேஸ்வர சர்மா
திரு.N. விக்கினேஸ்வரன்
திருமதி.S. விக்கினேஸ்வரன்
திரு.K. தவராஜா
திரு.S. கோகுலச்செல்வன்
திருமதி. வா. விஜயராஜேந்திரன்
திருமதி .Y. ஜோன்பிள்ளை
திருமதி .S. யோகேந்திரன்
திரு .S. P. சுரேஷ்குமார்

## கலை வர்த்தக பிரிவு ஆசிரியர் குழாம்

திரு.ந.ரகுமோகன் - பகுதித்தலைவர்
திரு.ஆர் லிங்கநாதன்
திரு.கு.வசந்தகுமார்
திரு.செ.சத்தியசீலன்
திரு.சி.கிருபாகரன்
திரு.எ.ஜெகதீசன்
திரு.கே.துரைராஜரெட்ணம்
திருமதி.சா.ஜெயபாலன்
திரு.பொ.யோகராஜா
திருமதி.ம.சண்முகதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி.க.கணேஸ்வரன்

திருமதி.நி.பரமேஸ்வரன்

திருமதி.ப.செல்வராஜா அன்ரனி

திரு.க.இராஜசேகர்

திருமதி.ஜீ.நிக்கலஸ்

திருமதி.த.சச்சிதானந்தம்

## இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்

திருமதி.ஜீ.நிக்கலஸ்

## க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கும் ஆங்கில ஆசிரியர் குழாம்

திருமதி.ல.திருக்குமரநாதன்

திருமதி.கோ.அரவிந்தராஜா

திருமதி.பி.ஞானகணேசன்

திரு.ச.ஸ்ரீரங்கநாதன்

## பொதுத்தகவல் தொழில்நுட்பம்

திரு.அ.நிலூஜன்

செல்வி.W.வினோதினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2015 உயிரியல் பிரிவு



## 2015 கணிதப் பிரிவு (A)



## 2015 கணிதப் பிரிவு (B)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2015 வர்த்தகப் பிரிவு (A)



## 2015 வர்த்தகப் பிரிவு (B)



## 2015 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Bio Stream - 2015 Batch

**Class Teacher: Mrs. V. Vijayarajendran**

1. Konesakurunathan Anoth
2. Vijayarajendran Nigesh
3. Kannathasan Rishimenan
4. Sivavarathan Deluxan
5. Vijayapragash Indrajith
6. Kumanan Haemashanth
7. Mabool Mohamed Suhair
8. Kidnathas Thanusunthar
9. Harichandra Dhushanth
10. Sugumaran Sujan
11. Sunthararajan Kajan
12. Sivarajah Antro Dinesh
13. Ponnuthurai Abiram
14. Jebanesan Mithurshan
15. Muhseen Thanish Afridi
16. Aboobaker Nishath
17. Aswathkahn Ihthisham

## Maths Stream – A 2015 Batch

**Class Teacher: Mr.N.Vigneswaran**

1. Premananth Gowtham
2. T. Santhusan
3. Ketheswaran Hishoban
4. Supiyapiragasam Nilkshanth
5. S. Sathuruban
6. Sivakumar Denushanth
7. D.Pravinthraj
8. Kokuluthasan Biruthivirajan

14. E.Sanjeevaraj
15. G.Sangirthan
16. P.Birunthagan
17. P.Mathushan
18. K.Dinojan
19. V.Kishanthan
20. P.Priyavathanan
21. V.Pithushan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. Raventhiran Gowrishangaram
10. Y. Kapinan
11. P.Puvipavan
12. A.Vinusanth
13. Thiruloogan Keerthi
22. N.Vivurshan
23. M.I.M.Ashnaf
24. N.M.Naveeth

## Maths Stream – B 2015 Batch

**Class Teacher: Mr.N.Jeganmohan**

1. A.Gowshikan
2. S.Anuvanthan
3. N.Nilashan
4. R.Tharshiban
5. V.Bavithran
6. N.Sathurshan
7. S.Subankan
8. R.Hosalarajh
9. T.Kuheshan
10. N.Hareeshraam
11. V.Manoj
12. J.Brannaa
13. S.Sajanth
14. J.Kirushoth
15. V.Kokulan
16. K.Harish
17. J.Avinasan
18. N.Rubashankar
19. S.Vishnutharan
20. S.Ravinath
21. S.Howshikan
22. N.Suresh
23. C.Abishek



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 Com A – 2015 Batch

**Class Teacher : Mr.R.Linganathan**

1. N.Thulaxanath
2. N.Gobishanth
3. K.Mithuzan
4. G.Kishanth
5. K.Kaviprasath
6. M.Dishanth
7. S..Gunalan
8. S.Niloshan
9. S.Thivaharan
10. S.Devakar
11. S.Dilakshan
12. N.Vagithan
13. S.Chandrakumar
14. G.Gobinath
15. I.Vithushan
16. R.Thanushan
17. S.Nandakisho
18. S.Tharshanth
19. N.Kokulan
20. G.Dineshwaran
21. T.Shankar
22. S.Sharugan
23. A.Neethan
24. P.Pabikaran
25. M.Nirojakan
26. M.A.Mohamed Zayan
27. R.Razeeth
28. J.Mohamed Mushfiq

## 13 Com A – 2015 Batch

**Class Teacher: Mr.L.R.Nicholas**

1. M.Birunthan
2. K.Dinesh
3. S.Vageesh Dilrukshan
4. K.Mithushan
5. R.Shanjaikanth
6. R.Goshigan

17. S.Thuvarakan
19. Y.Sathurshan
20. K.Sinthujan
21. A.Sukinthan
22. V.Akshayath
23. R.Vishan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. S.Mithushan
8. A.Thanushan
9. T.Dishanth
10. S.Akilraj
11. G.Thanuv varthan
12. S.Siyanthan
13. N.Gowrishankar
14. S.Thanushan
15. A.Jayarooban
16. M.Linthurshan
24. N.Sivatharshan
25. J.R.Shiran
26. F.R.Joy finton
27. V.J.Niroshan
28. J.Yohan pragash
29. J.Terance
30. C.G.Daniel dhakshai dev
31. A.R.Mohamed rijaz
32. T.Dilshath ali
33. Z.Saffn Mohamed

## 13 Arts – 2015 Batch

**Class Teacher: Mrs.F.S.Antony**

1. K.Anushanthan
2. P.Prasanna
3. G.Thanushan
4. P.VINUHARAN
5. M.Rinushan
6. R.Niraj
7. K.Jasotharan
8. T.Krishnakumar
9. S.Siranjith
10. E.Krishanth
11. S.Sivanuthan
12. V.Hemalathan
13. E.Pranavan
14. B.Yathshan
15. U.Prasanna
16. M.Dinushan
17. J.Allen
18. R.M.rasmin
19. K.Nishanthan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர மாணவர் ஒன்றியம்
# கணித விஞ்ஞான பிரிவு

போசகர் - திரு.செ. பத்மசீலன் (அதிபர்)
பொறுப்பாசிரியர் - திரு.என். ஜெகன்மோகன்
தலைவர் – R. Gobiprasath
செயலாளர் – R. Hirushiharan

Members:

R. Kishoth
K. Kajanan
M. Kokishan
G. Thilakshan
S. Pavalan
S. Giritharan

## T/R.K.M SRI KONESWARA HINDU COLLEGE BEST RESULT – 2014 BATCH

## BIO SCIENCE STREAM

| NO | NAME | RESULT |
|---|---|---|
| 01 | Thiruchelvam Abiheshan | 3A |
| 02 | Kulasegaran Srijayaharish | 3A |
| 03 | Nageshwaran Thanushanth | 1A 2B |
| 04 | Raveendran Sarugan | 2A 1B |
| 05 | Kalirajah Thijan | 1A 2B |
| 06 | Chandran Biranavan | 1A 2B |
| 07 | Varnakulendran Sharanghan | 1A 1B 1C |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MATHS STREAM

| NO | NAME | RESULT |
|---|---|---|
| 01 | Kurukulasingam Tharsanan | 3A |
| 02 | Sritharan Braveen | 3A |
| 03 | Janakan Sarangan | 3A |
| 04 | Sivanarulrajah Abisuthan | 3A |
| 05 | Jesurajan Karish | 2A 1B |
| 06 | Pathmanathan Pankayaraj | 2A 1C |
| 07 | Karunakaran Gajanan | 2A 1B |
| 08 | Amirthakulasingam Gogulan | 1A 2B |
| 09 | Sunthararajan Jatheesan | 2B 1C |
| 10 | Sivayogeswarasarma Hareindrasarma | 1A 2B |
| 11 | Jeyaswaran Jayalakshan | 2B C |
| 12 | Srikanthan Vidurshan | 1A 2C |

## உயர்தர மாணவர் ஒன்றியம் கலை/ வர்த்தக பிரிவு

போசகர் - திரு. இ.செ. பத்மசீலன் (அதிபர்)
பொறுப்பாசிரியர் - திரு.ந. ரகுமோகன்
தலைவர் - செல்வன்.த .நிவேநிதன்
செயலாளர் - செல்வன்.பா. வினோஜன்

## T/R.K.M SRI KONESWARA HINDU COLLEGE BEST RESULT – 2014 BATCH

| S.NO | NAME | RESULT |
|---|---|---|
| | COMMERCE | |
| 1. | SIVAJOHANAYAGAM DILAKSHAN | 3A |
| 2. | SIVAPATHAM YATHAVAN | 2A, B |
| 3. | RAVENTHIRAN SHARASHANTHURU | 2A, B |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 4. | SUNTHARALINGAM ARAVINTH | 2A, B |
| 5. | MATHIYALAGAN MAYURASHAN | 3A |
| 6. | JESUNAVAJOTHY JOHN KOBIHARAN | 2A, B |
| 7. | RAJENDRAN PRIYATHARSHAN | 2A, B |
| 8. | RAJAMANI ANOJAN | A, 2B |
| 9. | MAHADEVAIYER SARANKAN | 2A, B |
| 10. | SARVANATHAM NIRUSHAN | A, 2B |
| 11. | CANABATHIPILLAI LIFFYATHARSHAN | A, 2B |
| 12. | JAWAHIR MOHAME D RIMAS | A, 2B |
| 13. | RAVIRAJ NIJANTHAN | A, 2B |
| 14. | SELVARAJA KIRUSHANTH | A, B, C |
| 15. | MAHESWARAN SHATHURSHAN | A, 2B |
| 16. | LOGANAYAGAM THANISHANTHAN | A, 2B |
| 17. | UTHAYARASA JEEVALATHAN | A, 2B |
| 18. | PATHMASEELAN HARIPRASATH | A, 2B |
| | | |
| | **ARTS** | |
| 19. | MURAKAIYA SATHEES | A, 2B |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி வாழ்க்கை

தரம் ஒன்றில் வந்த போது அழுத நான்
தரம் பதின்மூன்றில்
இன்னொரு முறையும்
அழுகிறேன். ஏனெனில்
கல்லூரிக்காலம்
இன்னும் சில நாட்களில்
நிறைவடையப் போகிறது
என

அடிவாங்கும் பொழுது
இடைக்கிடை அழுதேன்
யாரும் அடிக்காமல்
இன்று அழுகிறேன்
மூன்றெழுத்து தாரக மந்திரமாம்
அந்த கல்லூரி "நட்பை"
பிரியப்போகும் என்
சோகத்தில்

கல்லூரியில் நண்பிகள்
என்று சொல்லி
பெண்கள் இருந்திருந்தால்
நட்பின் வலி
தெரிந்திருக்காது ஏனோ
இன்று நான்
நட்பின் வலியை
உணர்ந்து கொள்கிறேன்
நண்பனுடன் சேர்ந்து
இருக்கின்றமையால்

தமிழென்றால்
பந்தி பந்தியாக
எழுதனும் என்று
தான் நினைத்தேன்
உள்ள விடயத்தை
உள்ளவாறு கூற
வேண்டுமென

சொல்லித்தந்த தமிழ்
தாயே - என்
திருமதி சுமதி
ஆசிரியை

புவியியல் என்பது
படம் குறித்துப் பெயரிட்டால்
புள்ளிகள் வரும் என
எண்ணியிருந்த என்னை
புவியியல் என்பது
என்னவென்று
புரியவைத்த புன்னகை
கடல்
என் புவியியல் ஆசிரியர்
திரு.பொ.யோகராஜா
ஆசிரியர்

இந்து நாகரிகம் - ஐயோ
கஷ்டம் என நினைக்க
வைத்தது முற்காலம்
இந்து நாகரிகம் என்பது
பற்றிக்
கேட்ட கேள்விக்கு
விடை எழுதிப் பழகு என்ற
என் இதயத்தை கவர்ந்த
என் இந்து நாகரிக ஆசிரியர்
திருமதி.ச.மயூரதிஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிக்காத போதும்
எம்மை வழிநடாத்த
எப்பொழுதும்
வகுப்பிற்கு வந்து
எம்மிடம் என்ன
பாடம் எனக்
கேட்கும்
ரகுமோகன்
சேர் அவர்களுக்கும்
இது சமர்ப்பணம்

இனியாவது
படியுங்கடா
இன்னும் சில
மாதம் தான்டா
இருக்கு
மூன்றுபாடமும்
"எஸ்" எடுத்து
வேளிய போங்கடா
ஏனத்தன்
வாயால் கூறாது
உள்ளத்தால் கூறும்
எம் பொருளியல்
ஆசிரியர் திரு.சத்தியசீலம்
ஆசிரியருக்கும் இது சமர்ப்பணம்

இ.கிஷாந் 2015
**Atrs Batch**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OB-3 என்றவுடன்
ஞாகத்தில்
வந்திடுவார் IT
Teacher Vinothini
இதற்காகவே
இவருக்காகவே IT
பாடத்தை விளங்காமல்
கற்றோம்!

December மாதம்
நெருங்கிடவே
பயம்..........
கா.பொ.த சாதாரண
தரப் பரீட்சை வரப்
போகிறது என!

கணிதம் பாடமும்
சித்தி அடைந்து
எப்பாடம் வேண்டாம்
என
தரம் 12 கலைப்பிரிவில்
மீண்டும் நான்குமாத
விடுமுறையின் பின்
பாடசாலை வந்தோம்!

தமிழ் சுமதி டீச்சராம்
அவர்தான் வகுப்பாசிரியருமாம்
புவியியல் புதிய ஆசிரியர்
புதிய அறிமுகம் 2013
இல் திரு.P. யோகராஜா சேர்
இந்து நாகரீகம் மயூரதி டீச்சர்
பொருளியல் சத்தியசீலக சேர்
என அனைவரையும் அறிந்து பின்
ஆசிரியர் வராதபோது
வகுப்பில் பைலாதான்
பாடல்களை பாடி
சத்தமின்றி அடக்கமான
பிள்ளைகள் போல்
இருந்திடுவோம்
இன்றோ பிரியும்
தருணங்களில்
நண்பர்களையும்
அனைத்து
ஆசிரியர்களையும்
கல்லூரியையும்
விட்டுப் பிரியப்
போகும் சோகங்கள்
என் மனதில்

பிரிவொன்று சொல்லி
விடை பெறவில்லை
தொடரட்டும்
பயணமென விலகிச்
செல்கிறோம்
ஏதோ ஒருநாள்
மீண்டும் வருவோம்
கௌரவத்துடன்
கல்லூரிக்குப் பெருமை
சேர்த்து.........
- நன்றி -

**K.அனுசாந்தன்**
**13 Atrs**
**2015 Batch**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகளை மீட்கும் காலமிது

நீலக்கடல் தலை நிமிர்ந்து சொல்லும் - பரந்த
நீண்ட ஆறும் வியந்து சொல்லும் - தினமும்
கோணமலை நாகர்அருள் புரியும் - எழில் மிகு
கல்வி முத்து – கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

இராம கிருஸ்ணரால் தத்தெடுக்கப்பட்ட – அறிவு
பொங்கும் கல்லூரி அன்னையே
உலகின் நடுவே சஞ்சரிக்கும் நல்லவுள்ளங்களை
கல்வி ஒழுக்கம் தூய்மை என்னும் உன் கரங்களால் காப்பாயே!

பாடசாலை வண்ணாத்துப் பூச்சி பூந்தோட்டம் போல்
வகுப்பிலே நண்பர் கூட்டம்
பூவைத் தாங்கும் காம்பு போல் - எம்மைத்
தாங்கும் ஆசான் கூட்டம் இனியும் காண்போமா??

அதிபரின் சேவையாலும் ஆசிரியரின் அர்ப்பணிப்பாலும்
மாணவர் திறமையாலும் நண்பனின் உதவியாலும்
புது சரித்திரம்படைப்போம், உலகை
வெல்ல என்றும் துடிப்போம்..........

நல்லொழுக்குடன் 13 வருடம் என்னை – தன்மையாய்
பார்த்த என் அன்னையை மறப்பேனா! – என் வாழ்வில்
ஆய கலைகள்மூலம் அகிம்சையாய் எம்மை
கொத்திப் புரட்டிய மண்வெட்டி நீயே – நீ வாழ்க, உன் சேவை
வாழ்க.

வாழ்க்கைப் புத்தகத்தில் முக்கிய பக்கமாய் உனது நினைவுகள்
புரட்டிப் பார்ப்பேனே அதை நான் மீண்டும் வருவேனே
உனது மாணவனாய்! மீண்டும் வருவேனே
இராமகிருஸ்ன சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின்
- பழைய மாணவர்கள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்போம் சந்திப்போம்

கல்லூரியில்
முதலாம் தர பட்டாம்
பூச்சியாய் இருக்க
திடீரென வந்ததுவே
தரம் ஐந்து லமைப்பரிசில்

அதிலே வெற்றிகண்டும்
தரம் ஆறில்
காலடி வைக்கையில்
பல நண்பர்கள்
கிடைத்த போதும் புதிய புதிய
முகமெனவே
பயந்து முதலாம்
தவணை
மட்டும் தான்
இரண்டாம் தவணை
முதல்
தரம் ஒன்பது இறுதித்
தவணை வரை
வகுப்பில் கற்பிக்கும்
ஆசிரியர்கள் மாறினாரே
ஒழிய
நண்பர்கள் மாறவில்லை

தரம் பிரிக்கும்
தரம் பத்தில் "B" பிரிவில்
காலடி எடுத்து
வைத்த நாள்
வாழ்நாளில்
என்றும் மறவா
கவிதைகள்

வகுப்பாசிரியர்
யாரென நோக்கப்போய்
கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களின்
பட்டியல் எம்
கைகளிலே!

வகுப்பின் முதல்
பாடம்
எப்பொழுதும்
ஆங்கிலம் தான்
அவரே எம்
வகுப்பாசிரியர்
திருமதி.அ.கோமதி
ஆசிரியர்

தமிழ் சுமதி டீச்சர்
ஐயோ சாவுதான்
என நினைத்த
போதும்
சிறிய புன்முறுவலுடன்
சினம் கொண்ட
கண்ணோடும்
வந்தா டீச்சர்

ஐயோ!
கணிதம் என்று
கூறுகையில்
வகுப்பிற்கு
வந்திடுவா
சிவமணி டீச்சர்

சமயம் வருதுடா
என்று சொல்ல
தரம் எட்டில்
அடிவாங்கிய
ஞாபகம் என கண்களில்
வந்து சென்ற போதும்
சமயத்தை சாந்தமாய்
கற்பிக்க
வந்திடுவார் மல்லிகா டீச்சர்

விஞ்ஞானம்
என்றாலே நித்திரைதான்
கையில் பிரம்புடன்
கண்ணில் கண்ணாடியும்
போட்டுக் கொண்டு
வந்திடுவார்
பாஸ்கரன் சேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு என்றால்
கஷ்டம் தான்
இன்று வரை
அதை எமக்கு
கற்பித்த ஆசிரியர்
பார்த்தீபன் Sir
தொகுதிப்பாடம்
என்றால் என்னென்று
தெரியாத எமக்கு
தொகுதிப்பாடத்துக்கு
கலைவாணி டீச்சர்
புவியியல் மாணவர்கள்
வெளியே சென்றிட
வேண்டும்

புவியியல் என்றாலே
நடுக்கம் தான்
IPS என்ற செல்லப்
பெயருடன் நாம்
கூறும்
விஜயரட்ணம் ஆசிரியர்

OB – 2 என்றால்
Colour தான்
நினைவில் வரும்
ஏனெனில் சித்திரபாடம்
தேதியை தந்து
படம் மூலம்
விளங்கப்படுத்தி
படமும் வரையப்பண்ணி
Bend எடுத்து
அனுப்பிடுவார்
அருள்பாஸ்கரன் சேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கும் பூனையும்

- குரு எப்படி இருக்க வேண்டும்?

ஒரு சிறுவனுக்கு இனிப்பு சாப்பிடும் பழக்கம் உண்டு. இனிப்பை அவன் அளவுக்கதிகமாக சாப்பிடுவதாக அவன் அம்மா வருத்தப்பட்டார். சொன்னால் கேட்க மாட்டேன் என்கிறான். அம்மாவுக்கு ஒரே கவலை. அந்த ஊரில் எல்லோராலும் மதிக்கப்படும் ஒரு சாமியார் இருந்தார். அவர் சொன்னால் இந்தப்பயல் கேட்பான் என்று அம்மா நினைத்தார். அவரிடம் கூட்டிக் கொண்டு போனார். பையன் சமர்த்தாக வந்தான். சாமியாரை பார்க்க வந்திருந்தார்கள். கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் காத்திருந்தான் அவரை பார்க்க முடிந்தது.

அம்மா சாமியாரிடம் தன் பையனின் இனிப்பு பழக்கத்தை பற்றி புகார் சொன்னார். சாமியார் பொறுமையாக கேட்டு கொண்டார். “நீங்கள் போய் விட்டு ஒருவாரம் கழித்து வாருங்கள்” என்று சொன்னார். சிறுவனுக்கு புத்தி சொல்வதற்கு எதற்கு ஒருவாரம் என்று அம்மாவுக்கு குழப்பம். கொஞ்சம் கோபமும் கூட என்றாலும் சாமியாரிடம் கோபித்து கொள்ள முடியுமா? வணங்கி விட்டு கிளம்பினார். அடுத்த வாரம் சாமியார் பையனை தன் அருகே அழைத்து இனிப்பு சாப்பிடுவதன் பலன் தீமை எல்லாவற்றையும் விளக்கினார். அதிகம் சாப்பிட்டால் என்ன ஆகும் என்றும் சொன்னார். எப்படிக் கட்டுப்படுத்தி கொள்வது என்றும் யோசனை சொன்னார். பையனின் முகத்தில் மலர்ச்சி அம்மாவுக்கும் மகிழ்ச்சி தான் ஆனால் குழப்பம் தீரவில்லை.........

பையனை வெளியில் காத்திருக்க சொல்லிவிட்டு மீண்டும் சாமியாரிடம் வந்தார். சாமியாரின் முகத்தில் கேள்விக்குறி, நீங்கள் இதை புத்தியை போன வாரமே சொல்லி இருக்கலாமே சுவாமி என்றார். சுாமியார் முகத்தில் புன்னகை. போன வாரம் எனக்கே அதிக இனிப்பு சாப்பிடும் பழக்கம் இருந்தது அம்மா. நானே அந்த பழக்கத்திலிருந்து விடுபடாத போது எப்படி உங்கள் மகனுக்கு புத்தி சொல்ல முடியும்? ஒருவார காலத்தில் இனிப்பை குறைக்க பழக்கிகொண்டு விட்டேன். இதனால் இப்போது தைரியமாக சொல்கிறேன் என்றார். அம்மாவின் குழப்பம் தீர்ந்தது. உன்னை முதலில் திருத்தி கொண்டு ஊருக்கு புத்திமதி சொல் என்பது தான் இந்தக் கதையின் சாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குரு தன்னை எப்போதும் பட்டை தீட்டிக் கொண்டே இருக்க வேண்டும். பிறருக்கு சொல்லும் அறிவுரைகளைத் தான் முதலில் கடைபிடிக்க வேண்டும். ஆனால் ஒரு சிஷ்யன் எப்படி இருக்க வேண்டும்.

ஒருமுறை பரமஹம்சரிடம் சீடர் ஒருவர் கேட்டார். ஸ்வாமி நமக்கு புத்தி சொல்பவரே தவறு செய்பவராக இருந்தால் அந்த புத்திமதியை எப்படி எடுத்து கொள்வது? ஒரு மாணவன் குருவைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்றார் பரமஹம்சர். குருவே தவறு செய்தால் அவர் சொல்லை எப்படி நாம் ஏற்று கொள்வது என்று கேட்டார் சீடர். பரமஹம்சர் முகத்தில் புன்னகை. அழுக்கு துடைப்பம் தானே அறையை சுத்தம் செய்கிறது. சீடர் அதன் பிறகு கேள்வி எதுவும் கேட்கவில்லை. துடைப்பம் அழுக்காக இருந்தாலும் அது சுத்தம் செய்கிறது. அதை சுத்தமாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர் துடைப்பம் அழுக்காக இருக்கிறது என்று கவலைப்படுவதில்லை.

ஒரு சிஷ்யனின் மனநிலை எப்படி இருக்க வேண்டும். குருவின் சொல் தனக்கு பயன்படுமா என்பதை தான் பார்க்க வேண்டும். குருவின் தகுதியை பார்க்க வேண்டிய பொறுப்பு அவனுக்கு இல்லை. தான் தன் சொல்லுக்கு தகுதியானவராக இருக்கிறோமோ என பார்ப்பது குருவின் பொறுப்பு குருவும் சிஷ்யனும் தத்தமது பொறுப்பை ஒழுங்காக செய்தால் எது சரி, எது தவறு என்ற கேள்வியே வராது அல்லவா?

பூனையும் குரங்கையும் வைத்து இதே விஷயத்தை விளக்குவதுண்டு. பூனை தன் குட்டியை வாயில் கவ்விக் கொண்டு போகும். குட்டி வளரும் வரை அது குறித்த எல்லா பொறுப்பையும் தாய்ப் பூனையே ஏற்று கொள்ளும். குரங்கு விஷயத்தில் இது நேர்மாறாக இருக்கும். குட்டிதான் தாயின் கழுத்தை இறுக்கமாக கட்டிக்கொள்ளும் தாய் கவலையேபடாது. சொல்லிக் கொடுப்பவர் பூனைத்தாய் போலவும் கற்றுக் கொள்பவர் குரங்கு குட்டி போலவும் இருந்து விட்டால் பிரச்சனையே இல்லை.

**I.Vithushan**
**13 Com A (2015)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கணக்கீட்டு நியமனங்களின் ஒரு பார்வை

## கணக்கீட்டு நியமக்குழு

1995 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க இலங்கைக் கணக்கீட்டுக் கணக்காய்வு நியமச் சட்டத்தின்படி கணக்கீட்டு நியமக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவே கணக்கீட்டு நியமங்களை தோற்றுவிப்பதற்கும் அமுலிலுள்ள நியமங்களை மாற்றுவதற்கும் பிரசுரிப்பதற்கும் இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்திற்கு உதவுகின்றது.

## இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரிவுகள்

1. ஏற்பிசைவு/ அடையாளப்படுத்தல்
2. அளவீடு
3. வெளிப்படுத்தல்

## இலங்கை நிதி அறிக்கையிடும் நியமங்கள்

இலங்கையிலுள்ள ஒரே தன்மையான நிறுவனங்கள் ஒரே தன்மையான கணக்கீட்டை மேற்கொள்வதற்கு சர்வதேச நிதி அறிக்கையிடும் நியமத்தில் இருந்து உருவாக்கப்பட்ட ஒரு நியமமாக இலங்கையை நிதி அறிக்கையிடும் நியமம் உள்ளது.

## வேலைச் சட்டகம்

இலங்கையிலுள்ள ஒரே தன்மையான நிறுவனங்கள் ஒரே கொள்கையைப் பின்பற்றிக் கணக்கீட்டை மேற்கொண்டு அதை உலக நாடுகளிலுள்ள அதையொத்த நிறுவனங்களுடன் ஒப்பீடு செய்வதற்கான இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தின் நியமக்குழுவினால் வெளியிடப்பட்ட கொள்ளைகள் வேலைச்சட்டகமாகும்.

## புதிய நியமங்கள் (LKAS)

இலங்கையிலுள்ள ஒரே தன்மையான நிறுவனங்கள் ஒரே கொள்கையைப் பின்பற்றிக் கணக்கீட்டை மேற்கொள்ள பட்டயக்கணக்கறிஞர் நிறுவனத்தின் நியமக்குழுவினால் 2012.01.01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் பயன்பாட்டிற்கு வரும் வகையில் கொண்டு வரப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் புதிய நியமங்களாகும்.
LKAS அறிமுகத்தினால் பல்வேறுபட்ட தாக்கங்கள் ஏற்படுகின்றது.

- நிறுவனங்கள் விரும்பியோ விரும்பாமலோ இதனைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம்
- மிகவும் விரைவாக அறிமுகப்படுத்தப்பட்டால் இதனைப் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது.
- தற்போதைய தகவல் தொழில் நுட்பத்திற்கு மாற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படல்

## இலங்கை கணக்கீட்டு நியமத்தினை பின்பற்றுவதினால் ஏற்படும் அனுகூலங்கள்

- நிதியறிக்கைத் தகவல்களின் நம்பகத்தன்மை அதிகரிக்கிறது.
- நிறுவனங்களுக்கிடையே நியாயமான ஒப்பிடுதலை மேற்கொள்ள முடிதல்.
- கணக்கீட்டு தகவல்களை நிதிகூற்றுகளில் வெளிப்படுத்திக் காட்டுவதற்கு உள்ளமாற்று வழிகளின் அளவு மட்டுப்படுத்தப்படுகிறது.
- கணக்காளர்கள் பொருத்தமற்ற நடைமுறைகளைக் கடைப்பிடிக்கும் படிபுறுத்தும் மேலதிகாரிகளின் வற்புறுத்தலிலிருந்து தப்பிக் கொள்ள கூடியதாக உள்ளது.

## இலங்கை கணக்கீட்டு நியமத்தினை பின்பற்றுவதினால் ஏற்படும் பிரதிகூலங்கள்

- கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுவதனால் புதிய சிந்தனைகள் உருவாகுவதற்குத் தடையாக விளங்குகிறது.
- பல்வேறுபட்ட மாற்றுச் சிந்தனைகளை உருவாக்குவதற்கான வழிகளை கட்டுப்படுத்துகின்றது.
- நாடுகளுக்கிடையில் நோக்கும் போது நியமங்களில் ஒத்த தன்மை காணப்படுவதில்லை.

S.Nanthakisho
13 Com -2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் கல்லூரி நினைவுகள்

விடியல் பொழுதில் திறக்கும் சொர்க்க வாசலைப் போல
கல்லூரி வாசல் நோக்கி
ஆயிரம் கனவுடன் சமைந்த,
எத்தனையோ மாணவர்களுள் நானும் அடக்கம்
எந்தப் பாடத்தைத் தெரிவு செய்வது என்று தெரியவில்லை
எல்லோரிடமும் கேட்டுப் பார்த்தோம்
BIO, Maths தான் என்றார்கள்
பல்லைக் கடித்துக் கொண்டு படித்தால், பல்கலைக்கழகம் செல்லலாம் என்றார்கள்
நம்பித்தான் நாங்களும் வகுப்பிற்குள் நுழைந்தோம்.

நண்பன் எதிரியானால் நிம்மதி இருக்காது
எதிரி நண்பனானால் நம்பிக்கை இருக்காது
அதனால்தான் அனைவரும் நண்பர்களானோம்

அடித்தது முதல் மணி,
வகுப்பாசிரியர் வருகை, அவர் அன்பும் பண்பும் நிறைந்தவர் என்பதை ஆரம்பத்திலேயே அறிந்து கொண்டோம்
Time Table தரப்பட்டது, முதலில் கண்ணில் பட்டது இரண்டு UNI கள் தான்
UNI என்பதால் Union என்று எண்ணினோம் ஆனால் அது
UNIT Exam என்று எங்களுக்கு பின்னால் தான் தெரியவந்தது
முதல் நாள் என்பதால் முதலாம் பாடமே ஆசிரியர் கூட்டம்
ஆகவே மூன்றாம் பாடமான Chemistry இல் இருந்து ஆரம்பித்தது
எங்கள் முதல் நாள் வகுப்பு

நாட்கள் உருண்டோடின,
கண்ணை மூடித்திறப்பதற்குள் வந்தது கல்விச்சுற்றுலா
3000/- கொடுத்து, 3 முறை நுவரெலியாவைச் சுற்றிவிட்டு,
3 நாட்களில் வீடு வந்து சேர்ந்தோம்.
இதனால் ஆசிரியர்களுக்கும் எங்களுக்கும் இடையிலான நட்பு வலுப்பெற்றது.

UNIT Exam என்றவுடன் அடிவயிற்றில் ஒரு கலக்கம்
இரவில் தூக்கமின்றி நண்பனிற்கு Call எடுத்து
படிக்கிறாயா, என்று கேட்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஒரு கையில் புத்தகத்தை வைத்துக்கொண்டு TV பார்க்கிறேன் என்பான்
இரவிரவாய் படித்தும் கூட 20 புள்ளிகூட பெற்றதில்லை
ஒற்றைப் புத்தகம் கையில் எடுத்து நடைபோட
ஒரு வீரம் பிறக்கும் அடிமனதில்
ஆனால் மதிப்பில்லாத
மதிப்பெண்கள் மனம் சிறிது சோகம் காணும்

யார்க்கும் பயப்பட்டதில்லை நாங்கள்,
அசைன்மென்டா? அசைபோட்டு விடலாம்
செமினாரா நார் நாராய் கிழித்து விடலாம்
வாத்தியரா? வாருங்கள் பார்க்கலாம் என்றோம்
இருந்தும் நாங்கள் அனைவரும் பயப்படும் ஒரே ஒரு ஜீவன்
உண்டென்றால் அது Security ஐயா தான்
கல்லூரி வாசலை மட்டும் கடந்து விட்டால் போதும்
அன்றைய தினத்தையே கடந்து விடலாம்

Co-operaty இல் கடலை வாங்குவோமோ இல்லையோ
கண்டிப்பாக கடலையை போடுவோம் - குப்பைத் தொட்டிக்குள்

2 ஆவது வாரம் தொடங்கியது,
2 ஆவது வாரமே விளையாட்டுப் போட்டி தொடங்கியது.
எப்படியும் 2 பாடத்தையாவது Cut அடித்து விடலாம் என்ற சந்தோசம் எமக்குள்

விளையாட்டுப் போட்டி விளையாட்டாக முடிந்த பின்
தர தர என வந்தது தமிழ்த்தினப் போட்டி
அதன் பின்னே அடுத்ததாக ஆங்கில தினப்போட்டி
இதற்குள் மரதன் ஓட்டம் வேறு
தொடர்ந்தும் 2, 3 தவணைகளாக 3 பாடங்களிலும்
தோல்விகண்ட எங்கள் மனம்
இன்றை இலங்கை அணி போல் செயலிழந்து போனது

காலையிலேயே திறக்கப்படும் இடைவேளைக்குள்
காலி செய்யப்படும், நம் உணவு டப்பாக்கள்
எனினும், ஒருபோதும் நாம் உண்டதில்லை
நம்வீட்டு உணவுகளை மட்டும்

நம் கல்லூரியிற்கு வந்ததிலிருந்து,
2 முறை Tie மாற்றப்பட்டது
2 முறை Batch மாற்றப்பட்டது
20/- ரூபாய் கிழங்கு ரொட்டி இன்னும் மாற்றப்படவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பரீட்சை எழுதும் போதும் முடிவு செய்வோம்
அடுத்த பரீட்சைக்கு முதலில் இருந்தே படிக்க
ஆரம்பிப்போம் என்று இதோ வந்துவிட்டது இறுதிப் பரீட்சை
இன்னும் ஒரு பக்கத்தைக் கூட தாண்டவில்லை

Admission Sign பண்ணும் நாளில்
வரவேட்டில் கையொப்பமிடும்
எவருக்கும் தெரியவில்லை அது ஒரு
நட்பு முறிவிக்காக சம்மத உடன்படிக்கை என்று

**“எங்களுக்கு மறுபடியும் கிடைக்காத சில விஷயங்கள்”**
தேர்வு நாட்களில் மட்டும் தேடிச் செல்லும் - அந்த பிள்ளையார் கோயில்
குறைந்த நாட்கள் மட்டும் சுதந்திரமாய் திரிந்த கல்விச் சுற்றுலா
ஆசையால் இருந்தாலும் அடிக்கடி போகாத கல்லூரி நூலகம்
இங்கிருந்து கொழும்புவரை வேகமாக செல்லக்கூடிய School bus
கூரை மட்டுமே பச்சையாக இருக்கும் Green House
காலையிலே போடப்படும் காயத்திரி மந்திரம்
வேலை செய்யாத வகுப்பறை Speaker
அரவணைத்த நண்பர்கள்
வெள்ளை நிற சட்டைகள்
வெளிப்படையான சண்டைகள்
நண்பனின் சாப்பாடு
இனிமை தரும் இன்டர்நெட்
நாட்காலி மீது நடனம்
நண்பனுடைய மரணம்
திறக்கப்படாத புத்தகங்கள்
தினம் தோறும் கொண்டாட்டங்கள்
கலகலப்பான கடைசி மேசை
கவலை இல்லாத வாழ்க்கை மற்றும்
இந்த காலைக்கூட்டம்
என்ன செய்வது உயிரும் ஒருநாள் பிரிச்து போகும்
இருந்தும் எமக்கு நிழல்தந்த கல்லூரி மரமே
இந்த கடைசி தருணத்தில் உன்னிடம்
தண்ணீர்விட்டு விடைபெறவில்லை
எம் கண்ணீர் விட்டு விடைபெகின்றோம்.
எம்மை மறந்துவிடாதே நாமும் உன்னிழலில் ஓய்வெடுத்தோம் என்று

**கோ.அனோத்**
**2015 Bio**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

நண்பனாய் பழகி
எம் சந்தோசங்கள் போக்குவார்
பௌதீகப் புயல்
கோகுலச் செல்வன் Sir

எம்மை நல்வழிப்படுத்துவதற்கு
Advice போல் Advice செய்து
எம்மீது அன்பு கொள்வார்
Sp சுரேஸ் Sir

எமது நிலையான வாழ்விற்காய்
தன் நிலை பாராது
நிண்டு கொண்டே படிப்பிக்கும்
ஆசிரியர்கள்
எம் கல்லூரிக் கடவுள்கள்

கல்லூரி வாழ்க்கையிலே
கரம் சேர்த்த
நண்பன் கிஷாந்தனுக்காய்
கண்ணீர் சிந்திய தருணங்களை
வழங்கியதும் உயர்தரமே

நண்பா......
உன் அன்பை ......... என்
இதயத்தில் புதைய வைத்தேன்
ஆனால் உன்னை
மண்ணிற்குள் புதைத்த கொடுமையை
நான் மாண்டாலும்
என் மனம் மறக்காது

உன்னைப் போல் பாசம் கொண்டவனை
பாதியில் பறித்த இறைவன்
அந்த நேரம் மட்டும்
பகுத்தறிவை இழந்தானா
பிரிந்த நண்பர்களின் நட்பிற்கு
நீ மரணித்து உயிர் கொடுத்தாய்
இனிமேல் - என் வாழ்க்கையைச் சுற்றி
உன் ஆத்மா இருக்கட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ விதைத்துப் போன
அன்பு எனும் பூங்காவனத்தில்
உன் நினைவின் வாசம்
சோற்றுடன் கலந்திருக்கும்

இறைவா
என் கல்லூரி நினைவுகளில்
என் நண்பன்
மரணித்த தினம் மட்டும்
மறக்க ஒரு வரம் தா.........

என் கவிதைகள் - கண்கள் மூடிச் சிரித்தவை அல்ல
இதயம் கதறிச் - சிதறியவை அவை
ஏன் எனது கண்ணீரை ரசிக்கின்றாய்
கல்லூரித் தாயே

காலம் கடந்து போனாலும்
கடந்து தூரம் சென்றாலும்
என்றும் இனிக்கும்
கல்லூரியின் நினைவுகள்

ஒரு கிழங்கு ரொட்டியை
ஒன்று கூடி நாமுண்ண நிறைந்தது
வயிறு மட்டுமல்ல
நம் நட்பும் தான்

Doubt என்று கொண்டு சென்றால்
வேறு வேலைகளை புறக்கணித்து
புரிய வைப்பதில் புலமை கொண்டவர்
எமது பகுதித் தலைவர் ஜெகன் மோகன் Sir

மெல்லவே நடந்துவர
பாதம் தேய்க்கும் ஓசை கேட்டால்
ஐயா Sir வருகிறாரென
ஓடிச் சென்று பார்த்து கொள்வோம்

முகத்தில் அடித்தது போல்
ஒரு போதும் அவர் பேசமாட்டார்
முதுகில் அடித்த பின்தான்
பேசவே தொடங்குவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய பாடம் முடித்த பின்னும்
அடுத்த பாடம் free என்றால்
சரிவராது என்ற வார்த்தையுடன்
தொடரும் அவர் தாலாட்டும்

பாடவேளை பணி ஒலித்தவுடன்
ஐயா Sir இடம் இருந்து காப்பாற்ற
நேரத்திற்கு வந்திடுவார் யாசினி teacher
"தூக்கம் வருது teacher" என்றால
கொஞ்ச நேரம் ஓய்விற்காய்
ஒதுக்கித் தரும் நல்லுள்ளம்
அவருக்கே உண்டு

சம்பவம் எனக் கூறினாலும்
இரசாயனவியலின் சந்தேகங்கள் எழும்போது
சற்றும் அலட்சியம் செய்யாது
தெளிவாகத் தீர்த்து வைப்பார்
எமது விக்னேஸ்வரன் ஐயா அவர்கள்

பக்கத்து வகுப்பில் படிப்பித்தாலும்
தவராஜா Sir அவர்களின்
கணீர் என்ற குரலால்
அடுத்த வகுப்பில் இருந்தவண்ணம்
பல விடயம் கற்றுக் கொண்டோம்

எப்போதும் சிரித்த முகத்துடன்
சிறுபிள்ளை மனம் கொண்டவர்
என்றும் அன்பிற்குரிய
ஜெயதேவி ஆசிரியர்

உயிரியல் பிரிவு மாணவர்களுக்கு உயிரை
கொடுக்கக் கூடத் தயங்காது
மருத்துவத் துறைக்கு மாணவரை
வழிநடத்தும் வாசுகி teacher

Exam முன்னாடி படிப்பு
Exam பின்னாடி ஆப்பு
இது தான் O/L வாழ்க்கை
நாம் மட்டும் என்ன விதிவிலக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சசி, பகி, யதி என
செல்லமாய் அழைக்கப்பட்ட
கணித மும்மூர்த்திகள் பற்றி
கட்டாயம் சொல்ல வேண்டும்

95 புள்ளிகள்
பெற்றிருந்த போதிலும்
5 புள்ளி எங்கேயடா என
அரங்கேறும்
சசிதரன் Sir இன் பிரம்படி

பிழைகள் செய்தால்
கன்னத்தில் கைவைக்கச் சொல்லி
பளாரென விழும்
பகிரதன் Sir அறையில்
கையும் வலிக்கும்
கன்னமும் வலிக்கும்

யதீசன் சேரை பற்றிச் சொன்னால்
நண்பனாய் எம்முடன்
சரளமாய் பழகுவார்
பிழைகள் செய்தாலோ
சூர சம்சாரமே நடக்கும்

திருடனை பொலிஸ் பிடிப்பது போல்
தவறுதலைத் துப்பறிந்து
தண்டனையும் வழங்குவார்
விஜெயரெட்ணம் ஆசிரியர்

எத்தனை தவறுகள் புரிந்தாலும்
பக்குவமாய் புரியவைத்து
தவறுகளுக்கு பரிசாக
அன்பைப் பொழியும்
கோமதி teacher

சிகை அலங்காரம், சீருடை என
ஒழுக்கம் மீது கவனம் செலுத்தி
எம் மீது அக்கறைகொள்ளும்
பாஸ்கரன் Sir



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகள் செய்தாலோ
கண்களாலே கோபம் கொண்டு
தண்டனையும் வழங்கி
நல்வழிப்படுத்திய
சுமதி teacher

என்ன உதவி கேட்டாலும்
உடனடியாய் செய்து முடிக்கும்
வள்ளல் கரம்
லதா teacher
எத்தனை கேலிகள் செய்தாலும்
எமது எதிர்கால நன்மைக்காய்
extra class போடும்
சிவமணி teacher

மகன் என
செல்லமாய் அழைத்திடும்
கண்டிப்புடன் திருத்துகின்ற
கலைவாணி teacher

வரலாறு பாடத்தை
கதைகள் பல சொல்லித் தந்து
பக்குவமாய் புரியவைத்த
பார்த்தீபன் Sir

என இன்னும் பல பேரிற்கும்
நன்றிக்கடன் பட்டவன் நான்

சாதாரண தரத்தை கடந்து
உயர் தரத்தினுள்
காலடி எடுத்து வைத்தோம்
பல துறைகளைத் துணைத்துழைத்து
திசைமாறிச் சென்றன
பல நட்புக்கள்

உயர் தரம் என்பது
பாடசாலை வாழ்விலே
உன்னதமான தருணங்கள்

7.30 மணிக் கல்லூரிக்கு
எப்படிக் கிளம்பிடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழெட்டு நிமிடம் தாமதமாகும்
சிகை அலங்காரத்தில் ஆரம்பித்து
சீருடை வரை நீளும் விசாரணை

Saloon இல் Baer இன்
கையை காலை பிடித்தாவது
கச்சிதமாய் கட் வைத்து
கல்லூரியின் நுழைவாயிலே
பாஸ்கரன் Sir, வசந்த குமார் Sir
கண்களிலே பட்டுவிட்டால்
கலைப்பார் கல்லூரி விட்டு

லீவு நோட் புக்கில்
பலமுறை பதிவு செய்தோம்து
பாட்டி இறந்ததை

Interval வந்துவிட்டால்
பக்கத்து வகுப்பிற்கும் எங்களுக்கும்
Duster, Chalk ஆயுதங்களாய்
உலகப் போரே ஆரம்பிக்கும்
வகுப்பில் ஒருவனை
குனிய வைத்துக் குமிறுவதில்
அப்படி என்ன ஆனந்தம்

13 ஆண்டு கால வாழ்க்கையை
நலமுடன் பதிவுசெய்யும்
இக் கவிதை
என் கல்லூரிக்கு சமர்ப்பணம்

பக்குவமாய் கைப்பிடித்து
- என் அன்னை
அன்று பள்ளியில் சேர்க்கையில்
எப்போது கடைசிமணி ஒலிக்குமென
காத்திருந்த நாள்
- இன்று
பாடசாலை வாழ்வின்
- இறுதித் தருணத்திலே
காலம் மெல்லச் செல்லாதா — என
காத்திருக்கக் காரணம் - என்
"கல்லூரியின் நினைவுகள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சு மிட்டாய் வாங்கித்தந்து
   என்னை பள்ளிக்குக் கூட்டிச் செல்ல
முதல் நாள் வகுப்பில்
   தெரியாத முகங்களை
      அறிந்து கொள்வதற்காய்
அதுவரை எமக்கிருந்த
   சிறிய வரலாற்றிலே
சிலதைப் பகிர்ந்து கொண்டோம்

புதிதில் இருந்த பயம் - சற்று விலகவே
   அமர்களமாய் அரங்கேறியது
எம் சிறுவயதுக்குறும்புகள்

ஆரம்பப் பள்ளியிலே
   பெரிய முற்றம், மரங்களென
எம்மிடம் சொல்லவா வேண்டும்
   சிறு பட்டாம் பூச்சிகளாய்
      சிறகடித்துப் பறந்தோம்

சிறு குஞ்சுகளாய் கூட்டிலிருந்து
   பறக்க முற்படும் குருவிகள் போல்
ஆரம்பப்பள்ளி ஆசிரியரின்
   ஆரவணைப்பிலிருந்து விடுபட்டு
தரம் 3 தளில் கால்பதிக்க
   வந்தோம் இங்கு

காலம் உருண்டோட
   வந்தது 5ம் தரம்
Sclorship எனும் படிக்கட்டை
   தாண்ட வேண்டிய நேரம்
சுமந்து வர முடியாதபடி – சுமந்து வந்தோம்
   புத்தகப்பை
எம்மைவிடப் புத்தகப்பை
   - பெரிதாக இருப்பதில்
ஆச்சரியம் ஏதும் இருக்கவில்லை

எப்போதும் exam வரும்
   ஒரு தவணை லீவு வரும் என
ஏங்கியிருந்தோம் அன்று
Exam உம் வந்தது
   - லீவும் கிடைத்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன............
Result ஐயும் சேர்ந்தே பெற்றுக்கொண்டோம்
125 க்கு மேல் பெற்றால்
Pass எனும் நிபந்தனை மீறி
அன்று சித்தியடைந்தோம்
- 72 பேர்
இன்னும் உடைக்கவில்லை
ஒருவரும் அச்சாதனையை

வாழ்வின் அடுத்த படிக்கு
காலடி எடுத்துவைக்கும்
தருணமும் வந்தது

அதுவரை நன்றாக
- சிறகடித்துப் பறந்திருந்த
பட்டாம் பூச்சிக் கூட்டங்கள்
- பிரித்து விடப்பட்டது

நண்பர்களை
பிரிந்த வேலை ஒரு புறம்
புது நண்பர்களை
பெறும் சந்தோசம் ஒருபுறம்
எடுத்து வைத்தோம் காலடியை
தரம் 6 இற்குள்

ஏதோ ஒரு நாள்
- teacher இடம்
பிரம்படி பட்டபோது
வலிக்குதாடா என்ற விசனத்தால்
வளர்ந்தது நம் நட்பு

Interval வந்தால் சரி
ஓடிப்பிடித்து விளையாடி
மண்டையை உடைத்துக் கொண்டோம்
ஆசிரியரின்
கண்டனமும் கனிவுமாய்
கடந்தது காலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 10 இற்குள் நுழைவதற்காய்
பிரிக்கப்பட்டோம் மீண்டும்
4 வருடண நட்பு பறிக்கப்பட்டதில்
நிலை குலைந்து போனோம்

அதுவரை காற்சட்டையில்
சுதந்திரமாய் சுற்றித்திரிந்தோம்
நீளக் காற்சட்டையுடன்
- Sports meet இல்
Marching உம் பற்றிக் கொண்டது

Bore அடிக்கும் teachers
ஓடி ஒழியும் English Subject
Party க்கு Canteen
குட்டிக் குட்டிச் சண்டைகள்
India, Pakisan போல்
பக்கத்து Class room
அடிக்கடி OC treat
முடியாத trip
தோள் கொடுத்த தோழன்
Enjoy க்கு
Last bench jokes

கல்லூரி தாயினை கடைசிச் தருணத்தில்
கரம் கூப்பிக் கும்பிடும்
S.Anuvathan
13 MAths "B"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத்தாய்

சூர்யா ஓடோடி வருகின்றான், "அம்மா....... அம்மா....." அப்போது அவனின் தாயான ஸ்ரீதேவி தன் மகனின் அலறல் சத்தம் கேட்டு ஏதோ நடந்து விட்டதோ? என எண்ணி பயந்து கொண்டு வெளியே வருகிறாள். "டேய் என்னடா ஆச்சு?... உனக்கு என்ன நடந்துச்சு?...." என்று கேட்டாள். அதற்கு அவன் "அம்மா நான்..... நான்...." சோல்லடா மகனே என்ன நடந்துச்சு?" "அம்மா உயர்தரப் பரீட்சையில் திரி ஏ (3A) மூன்று பாடமும் அதிசிறந்த பெறுபேறு எடுத்து இக்கன் அம்மா" என்று கூற ஸ்ரீதேவிக்கு ஆகாயத்திலே பறப்பது போன்ற ஓர் உணர்வு. தன் மகனை அன்போடு கட்டியணைத்து அவளின் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக சூர்யாவின் நெற்றியிலே ஸ்ரீதேவி முத்தம் இட்டாள். அந்த அன்புத்தாய் தன் மகனின் இந்த பெருமையை தன் உறவினர்களிடத்திலும், அயல் வீட்டாரிடமும் கூறி அங்குள்ள மக்களுக்கு இனிப்பு வேண்டிக் கொடுத்து சந்தோசத்தில் அத்தாய் தன்னைத் தானே மறந்து ஆனந்தத்தில் குதித்தாள்.

தன் மகனின் உயர் படிப்புக்காக ஸ்ரீதேவி தான் வழமையான செய்யும் கூலி வேலைக்கு மேலதிகமாக அவ்வேலைக்குச் செல்வதற்கு முதல் சில வீட்டுக்குச் சென்று வீட்டு வேலைகளைச் செய்தும். பின்னர் கூலி வேலை முடிந்த பின்னர் ஏனைய வீட்டிற்கும் சென்று வீட்டு வேலைகளைச் செய்வாள். இதற்குக் காரணம் ஸ்ரீதேவியின் கணவன் சிவகுமார் ஒரு விபத்தில் இறந்து விட்டார். அப்போது சூர்யாவின் வயது 5 ஆகும். அன்று முதல் சூர்யாவின் படிப்புக்காக ஸ்ரீதேவி கஷ்டப்பட்டு வந்தாள். சூர்யாவும் கண்டி பேராதெனியா பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி அங்கு அவன் தன் படிபபை மேற்கொண்டான். அங்கு ஏற்படும் ஏனைய செலுவுகளுக்கும், அவனின் கைச்செலவிற்கும் ஸ்ரீதேவி இங்கிருந்து பணம் அனுப்பிக் கொண்டிருந்தாள். அவனும் அங்கே தனுஷ், கார்த்தி, விஜய் மற்று சிவகார்த்திகேயன் ஆகியோரிடம் நட்புக்கொண்டு தன் படிப்பை சிறப்பாக மேற்கொண்டு வந்தான்.

ஒருநாள் பல்கலைக்கழகத்தில் பெற்றோர் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இந்த சந்திப்புக்கு கட்டாயம் பெற்றோர் அல்லது பாதுகாவலர் வேண்டும் என அறிவித்தல் வழங்கப்பட்டது. இப்போது சூர்யா யோசித்தான். தன்னுடைய நண்பர்களின் பெற்றோர்கள் அனைவரும் படித்தவர்கள் ஆனால் என்னுடைய தாய் படிக்காதவள் இதனால் என் நண்பர்களிடம் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்கள் என்னுடன் பழக வேண்டாம் எனக் கூறினால்... நான் என்ன செய்வேன்? என்று எண்ணி இறுதியில் சூர்யா ஒரு முடிவுக்கு வந்தான். தன் தாய்க்கு தொலைப்பேசியில் "அம்மா இங்க ஒரு மீட்டிங் கட்டாயம் பெற்றோர் வரனும் ஆனா நீ படிக்காதவ அதனால நீ இங்க வந்துட்டு நான் சொல்ற இடத்தில சைன் வைச்சிட்டு போ" எனக் கூறினான். அவனுக்கு கைச் செலவிற்கு பணம் கொண்டு வரும் படியும் கூறினான். அதேபோல ஸ்ரீதேவியும் வந்து கையொப்பம் வைத்துவிட்டு போகும் போது தன் நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த சூர்யாவை அழைத்தாள். அப்போது சூர்யாவின் நண்பன் கார்த்தி "டேய் மச்சான் யார்டா? உன்ட அம்மாவா?" என்று கேட்டான். ஆதற்கு சூர்யா "சே இல்லடா அது அம்மாட அக்கா என்ட பெரியம்மாடா" எனக் கூறினான். இதைக் கேட்ட ஸ்ரீதேவியின் உள்ள அனலாய் கொதித்தது. தன்னை அறியாமலே கண்களில் இருந்து வந்த கண்ணீரை துடைத்து விட்டு தான் கொண்டு வந்த பணத்தைக் கொடுத்துவிட்டு அவள் மனதில் பெரிய துன்பத்துடன் வீடு நோக்கி வந்தாள்.

காலங்கள் இலையுதிர் காலத்தில் விழும் இலைகள் போல வேகமாக கடந்தன. சூர்யாவுக்கு பல்கலைக்கழகத்தில் விடுமுறை இந்த விடுமுறையை மகிழ்ச்சியாக கழிப்பதற்காக அவனின் நண்பன் சந்தானம் ஒரு திட்டத்தை முன்வைத்தான். அது வேறொன்றும் இல்லை "ஏப்ரல் மாதத்திலே" திரைப்படம் போல அவரவர் வீட்டுக்கு ஒவ்வொரு நாளும் செல்லுவோம். என்று கூற அதற்கு அனைவரும் சம்மதித்தனர். ஆனால் சூர்யாவின் முகம் மட்டும் வாடியது. இதனைப்பார்த்த தனுஷ் "ஏன்டா சூர்யா உனக்கு விரும்பமில்லையாடா?" எனக் கேட்டான். அதற்கு சூர்யா "டேய் அப்படி இல்லடா விருப்பம் தாண்டா" எனக் கூற அனைவரும் செல்வதற்கு ஆயத்தமானார்கள். முதலில் தனுஷின் வீட்டுக்குச் சென்றார்கள். இறுதியாக சூர்யாவின் வீட்டுக்குச் சென்றார்கள். அதற்கு முதல் இரவு அவன் தொலைபேசியில் தன் தாயிடம் தானும் தன் நண்பர்களும் வருவதாகக் கூறினான்.

மறுநாள் காலை சூர்யாவின் வீட்டிற்குச் சென்றார்கள். சூர்யா பயத்துடன் தன் நண்பர்களை தன்னுடைய வீட்டிற்குள் அழைத்துச் சென்றான். தாய் ஸ்ரீதேவி களைப்புடன் வந்த அவர்களுக்கு குளிர்பானம் கரைத்து வந்து கொடுத்தாள். அதனை வேண்டிக் குடித்துக் கொண்டு இருக்கும் போது கார்த்தி சூர்யாவிடம் "மச்சான் இது உன்ட பெரியம்மா தானே?" எனக் கேட்டான். "ஓம்டா அம்மா தூரத்துல ஒரு செத்த வீட்ட போயிட்டாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிஞ்சவங்கட வீடுடல அதான் அம்மா பெரியம்மாட்ட சொல்லிட்டு போய் இருக்கா அதுக்காகத்தான் இங்க · இவங்க வந்து இருக்காங்க" என்று கூற அதற்கு தனுஷ் "டேய் அப்ப வாடா நாம போவம் உங்க பெரியம்மாக்கு கஷ்டம் தானே" எனக் கூறி புறப்பட சூர்யாவும் ஆனந்தத்துடன் ஆம் என தலையாட்டினான். ஆனால் "பெத்த மனம் பித்து பிளள மனம் கல்லு" என்பது போல தாய் சமையல் அறையில் இருந்து அழுது அழுது கொண்டே இருந்தாள். போகும் போது சூர்யா தன் தாயிடம் "பெரியம்மா பொயிட்டு வாரேன் அம்மாட்ட சொல்லுங்க" எனக் கூறிவிட்டு போக அத்தாயின் உள்ளம் "கொல்லன் உலைக்களத்தின் நெருப்பு போல" கொதித்தது.

இவ்வாறு அவ்வப்போது தன் சொந்த மகனால் பல கஷ்டங்கள், கவலைகள், துக்கங்கள், துயரங்கள், வெட்கங்கள் மற்றும் வேதனைகளை அடைந்தாலும் அந்த அன்புத்தாய் தன் மகனின் மீது வைத்த அன்பை கடுகளவு கூட குறைக்கவில்லை. இறுதியில் ஒரு பட்டதாரியாக வெளிவந்த சூர்யாவுக்கு ஒரு நல்ல இடத்தில் வேலை கிடைத்தது. சூர்யாவுக்கு ஒரு நல்ல மணப்பெண்ணை ஸ்ரீதேவி தேடினாள். ஆனால் சூர்யாவோ ஜோதிகா எனும் பெண்ணைக் காதலிப்பதாக கூற தன் மகனின் சந்தோமே தனக்கு வேண்டும் என நினைத்து அவள் அதற்கு ஒப்புக்கொண்டாள். ஆனால் திருமணத்தின் பின்பு ஜோதிகா தன் மாமியை கேவலமாகக் கணக்கெடுத்தாள். அவள் சூர்யாவிடம் சில பல விடயங்களைக் கூறி அவளுக்கு ஒவ்வொரு நாளும் ஏச்சு வாங்கிக் கொடுத்தாள். சில சமயங்களில் சூர்யா தன் அன்புத்தாய்க்கு கெட்ட வார்த்தைகளால் கூட பேசினான். இறுதியில் அவன் தன்னைப் பத்து மாதம் பெற்றெடுத்த தாயை முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டான்.

அந்த முதியோர் இல்லத்தில் ஸ்ரீதேவியைப் போல பல தாய்மார்கள், தந்தைமார்கள் இருந்தார்கள். மாதத்தில் இருமுறை அல்லது மூன்று முறை சூர்யா தன் தாயைப் பார்ப்பதற்குப் போவான். அந்த இல்லத்தில் உள்ள சில தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைப் பற்றி கேவலமாக பேசுவார்கள். ஆனால் ஸ்ரீதேவியோ தன் மகனைப் பற்றி பெருமையாகவே தான் பேசுவாள். ஒருமுறை சூர்யா தன் தாயைப் பார்ப்பதற்கு வரும் போது அந்த அன்புத்தாய் தன் மகனை அன்போடு அழைக்கிறாள். "மகனே தங்கம் அம்மாக்கு இறுதியாக ஓர் உதவி செய்வாயா?" எனக் கேட்டான். அதற்கு சூர்யா "ம்ம் சொல்லுங்க கேட்பேன்" என்று கூற அத்தாய் "மகனே இங்க வெயில் காலத்துல இருக்கவே ஏலாடா சரியான வெக்க அதனால் நீ பேன் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கி போட்டா உனக்கு நன்மையாகிப் போகும்டா, உனக்கு பயனாகிப் போகும்டா'' எனக் கூறினாள். அதற்கு சூர்யா கோபத்துடன் "என்ன வேணும் பேன் சாகப்போற வயசுல உங்களுக்கு சொகுசு கேட்குதோ? எனக்கூற அதற்கு அந்த அன்புத் தாய் "கண்ணா, என்ட செல்லக்குட்டி நான் பேன் கேட்டது எனக்கு இல்ல நான் உங்க அப்பா செத்த பிறகு உனக்காகத்தான் வாழ்ந்தன், நீ நல்லா இருக்கனும்டு தான் நான் பாடுபட்டன், இந்த பேன் உனக்குத்தான், ஏன்டா ஒரு வேள நீயும் இங்க வந்தா நீ பேன் இல்லாம தூங்க கூட மாட்டா அதான்டா கேட்டன்'' எனக் கூற தன் தாய் தன் மீது வைத்த அன்பை அப்போது தான் சூர்யா யோசித்தான்....."

சூர்யாவின் கண்களில் இருந்து நீரானது மாரிமழைப் போல வந்தது. தான் செய்த தவறை உணர்ந்த சூர்யா தன் தாயைக் கட்டியணைத்து அவள் நெற்றியில் முத்தமிட்டான். அதுதான் அவள் இறுதியாக சிரித்த சிரிப்பாகும். பிறகு சூர்யா தாயிடம் "அம்மா நீ வீட்டிற்கு வா அங்க இருப்போம்'' என்று கூற தாய் தன்னால தன் மகனுக்கும் மருமகளுக்கும் இடையில் எந்த வித சண்டையும் வரக்கூடாது என நினைத்து தன் மகனிடம் "செல்லம் நான் இங்கேயே இருக்கிறேன் நீ என் அன்பை இப்ப புரிஞ்சு கொண்டதே போதும்'' எனக் கூறி ஆனந்தக் கண்ணீருடன் தன் மகனை கட்டியணைத்து அவன் கன்னத்தில் முத்தமிட்டவாறே "நீ நல்லா இருடா கண்ணா'' எனக் கூறி முடியும் போதே அவளின் உடலும் இந்த உலகை விட்டு பிரிந்தது சிரித்த முகத்துடன். "ஓ....ஓ....ஓ..." என்று கதறியவாறே தன் தவறை உணர்ந்த சூர்யா அந்த அன்புத்தாயை கட்டியணைத்துக் கொண்டு அழுதான்.

எதையும் மன்னிக்கும் ஒரே நீதிமன்றம் தாயின் உள்ளம் மட்டுமே''

"கதையாசிரியர்''
R.M.Rasmin
13 Atrs (2012 Batch)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிச் சாலை

பஞ்ச வருடங்கள், பழகிய பிஞ்சு நட்புகள், பஞ்சாய்ப் பறக்க
அறிமுகமில்லாத புதிய முகங்கள் ஆறில்,
பாடங்களைப் பார்த்தவுடன், 6 ஆம் தரத்தில் கற்கின்றேன் என
ஒரு திமிர் - அந்த ஆற்றில் இறங்கினோம்,
ஏழு கடல் தாண்டி எட்டா சிகரத்திற்குக் கொண்டு சேர்த்தது,
எட்டிப் பிடித்தோம், பார்த்தால் நாம் பிடித்தது சிகரத்தையல்ல,
சிட்டுக்குருவிக் கூட்டையென்று, காரணம்,
தொடர்ந்தே அழைத்தது, 3 நாமங்கள்

9ம் தரத்தில், எமது கல்வித்தனமான சில்லி விளையாட்டுக்களுக்கு
முற்றுப் புள்ளி வைத்தார் பகுதித் தலைவர் - சாகும் வரை மறக்காது
IPS என செல்லமாக அழைத்த எமது விஜயரட்ணம் miss
பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பது இங்கில்லை
இன்று தான் இனிக்கிறது, புளிப்புடன் வாங்கிய அன்றைய அடிகள்
மாகாணப் பொதுப் பரீட்சையென்று பீதியடையச் செய்தனர் பலர்
Marks ஏ வராதுடா எனப் பாலை வார்த்தான் நண்பன்,
"அடுத்த வருஷம் பக்கத்தில தானே வருவீங்கள், அப்ப இருக்கும் ஓ" என்றார் விஜயரட்ணம் மிஸ்
அதன் அர்த்தம், பின்னால் விளங்கியது. எமக்கும் பின்னால் தான் விளங்கியது

மூப்புத் தனத்துடன், முழங்கால் மேலிருந்து காற்சட்டையை
முக்கால் தாண்டியும் கீழிறங்கச் செய்தது, பத்தாம் தரம்
முதல் தடவை போட்ட நீளக் காற்சட்டை
30 வருடத்திற்கு முன் இருந்து பாக்கியராஜ் Fashion ஆம், அது
உயர்தர மாணவர்களின் நக்கல் கதை
10 என்றாலே ஒரு கெத்து
உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் எனத் தனித்தனியே
அறிமுகமாகியது

10 இலும் 10 ஊர்களைச் சுற்றிப்பார்க்க ஒரு சந்தர்ப்பம்
பெயர் கல்விச் சுற்றுலா – ஆனால்
பூங்காவில் புதர்கள் குடையான கதையையே அறிந்தோம்
வயதுக்கு மீறிய சில உணர்வுகளுடன் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10ம் தர வகுப்பறை ஒரு சொர்க்கம்,
காளியப்பு அகம், காளிகோயிலை அடிக்கடி எட்டிப் பார்க்கச் சொன்னது
அவ்வளவு அழகையும் ரசிக்க வேணுமே,
நான் கோயில் சிற்பங்களைச் சொன்னேன்.
ஒரு வாரத்திற்கு முன்பே வாத்திகள் ஒப்படைகளைத் தந்திடுவார்
மறு நொடியே மறந்துவிடும்,
இறுதி நாளில் ஓரிரு பலியா சிக்கும்,
அவற்றின் ஒப்படைகளைப் பார்த்து, ஒன்றாகக் கலந்து
அவனை விட அதிக புள்ளி பெற்ற நாட்களும் உண்டு

ஒப்படை என எழுதி வானவில் மிதக்க வர்ணங்கள் பறக்க
அடுத்த தாளியே நன்றி கூறிய நாட்களும் உண்டு

வகுப்பறையின் மதிலோரம் இருப்பவர்கள், மஹாத்மாவை விடத் தியாகிகள் தான்,
யார் கதைத்தாலும் அவனுக்குத் தாயே அடி

இல்லப் போட்டிகள் வந்துவிட்டால் போதும்
ஓட்டக்காரர்களை விட வேகமாய் ஓடி உற்சாகிக்கும் சில ஆசிரியர்கள்,
இது தான் வாய்ப்பென்று mic இல் நக்கலாக ஒரு commentry அடித்துவிவார் இன்னொரு ஆசிரயர்

முத்தமிழை முக்கனியாய் தந்தவருக்கும்,
கணிதத்தை கண்முன் நிறுத்தியவருக்கும்,
விஞ்ஞானத்தை விந்தையூட்டியவருக்கும்,
மார்க்கத்தை மறக்காமற் செய்தவருக்கும்,
சித்திரத்தை சிற்பமாய் செதுக்கியவருக்கும்,
அந்நிய மொழியை அந்நியோன்னியத்துடன் தந்தவருக்கும்,
கணனி பற்றிக் கற்பித்தவருக்கும்
எமது கேடான கோடி நன்றிகள்

10 ரூபாய் பகோடாவிற்கு 10 பேர் கையேந்திய காலமும்,
அருகில் ஆசிரியர் எனத் தெரியாது, தோளில் கைபோட்டு
செம்மொழியில் திட்டிக்கழித்த காலமும்,
சாதாரண தரம் வரை நீடித்தது,

எம்மால் முடிந்த பெறுபேறு, 9, 9A சித்திகள்
செய்த அநியாயங்களை மறந்து,
மனசார வாழ்த்தினர் ஆசிரியத் தெய்வங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

O/L முடித்ததும்
நாலு மாதம் கூத்தடிக்கலாம் என எண்ணினோம்
Parrot இல் நிம்மதியாக நாலு கொத்தடிக்கக்கூடி விடவில்லை
உயர்தரம் Calling bell ஐ அடித்தது

அப்ரிடி
2015 Bio

## இனிமை தந்த இந்துக்கல்லூரி

பெற்றவர் சுமந்த கனவு
முதுகில் புத்தக சுமையாய்
முகாமையாளர், கண்காளர் என்ற
ஏராளமான எதிர்பார்ப்புகளில்
குழந்தை குட்டிபோடும் என்ற ஆசையில்
புத்தகத்தில் வைத்த மயிலிறகை மறந்து போனோம்.

அறிவை அறிமுகம் செய்த ஆசான்கள்
சந்தோசத்தை அள்ளித்தந்த நண்பர்கள்
பசுமை நினைவாய் அடித்த அரட்டைகள்
பத்துருபாய்க்கு வாங்கிய கிழங்குரொட்டி
இனி எங்கு காண்போம்.

பள்ளிக்கூடத்தின் மேற் கூரையில் ஒரு தனி ஓடு
சரியத் தொடங்கிய தருணத்தில் எல்லாம் மறந்து வெளியேறியவர்களை
சரிபார்க்கையில் மனது லேசாக வலிக்கின்றது.
ஒரே கோட்டில் தொடங்கினோம்
பந்தயம் முடிகையிலே பலபேரைக் காணவில்லை

சின்னஞ்சிறு சண்டைகள்
பள்ளிப்பருவ காதல்கள்
இனி எங்கு காண்போம்
உயிரை வாட்டிடும் நினைவுகள்
தந்து சேர்த்த எமது கல்லூரியை
பிரிகையில் மனம் வலிக்கிறது

த.டிஷாந்
**13 Com "B"2015**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியாவிடை

❖ பதின்மூன்றாண்டு பள்ளிவாழ்வில்
அன்பை மையப்படுத்தி
நட்பை முன்னிலைப்படுத்தி
ஆற்றலோடு வாழ்ந்த எங்களுக்கு
பிரிவு எனும் பெருஞ்சோகம்

❖ ஆண்கள் பெண்களிடம் பூத்தது
நட்பு எனும் அழியாப்பூ
ஆசிரியர் மாணவரிடம் பூத்தது
அன்பு என்னும் அழகான பூ

❖ பள்ளி மாணவர்களிடம் பூத்தது
நகைப்பு என்னும் நகைச்சுவை பூ
தலைமை ஆசிரியர் மாணவரிடம் பூத்தது
வெறுப்பு என்ற வெந்த பூ

❖ இதையெல்லாம் கடந்த நாங்கள்
இன்று பள்ளி இறுதிநாளில்
ஒன்றாக கூடிய வேளையில்
பிரிவு எனும் சோகம் சூழ்ந்தது

❖ நாங்கள் செய்த சேட்டைகளால்
பெற்ற தண்டனையோ பல
அன்றெல்லாம் சிறிதும் வருந்தாத நாங்கள்
இன்று வருந்துகிறோம்.

❖ பெருகியது வெள்ளம்
ஒவ்வொரு மாணவனின் விழிகளிலும்
ஆனால் நாட்கள் உண்டு
என்றாவது ஒருநாள் இணைவோம்
அதுவரை நாங்கள் எங்கிருந்தாலும்
தொடரும் எங்கள் நட்பு

அ.ஜெயரூபன்
**13 Com "B"2015**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுரச கமலாசனம்

கனவுகளுடன் ஆரம்பித்த என் கல்லூரி வாழ்வை ஆரம்பபிரிவில் பசுமையும், மங்களமும் நிறைந்ததான பச்சை, மஞ்சள் மாலையணிவித்து என் முன் சகோதரர்கள் (2014 பிறிவு) என்னை வகுப்பறை வரை வாயிலிருந்து அழைத்து சென்றனர். பாசமுடன் பேறின்பராஜா, சிவனேசமலர் ஆசிரியர் தந்த இனிப்பு கல்லூரியின் முதல் நாள் முதல் இன்று வரை எந் நாவிலுண்டு இறுதியவரை, உன் இலக்கு அடையும் வரை உன்னை ஒரு ராஜாவாகவே கைபிடித்து வழிகாட்டி அழைத்து செல்வேன் என்றே என் கல்லூரி அன்னை எனக்குணர்தினாள் அவள் எனது முதல் நாளிலே.

ஆலமரத்தடியிலே கபடி விளையாடியதும், ஆசிரியருக்கு மலர்கள் பரிசளித்ததும் கழிப்பறையில் சண்டையிட்டு கொண்டதும் சாகும் வரை சலிக்காத ஒன்று கோபம் தீர எமக்கு தேவைப்பட்டது வெறும் 18 மணித்தியாலங்கள் தான். மறுநாள் காலை எவற்றையும் நாமறிவோம்.

புலமை பரிசில் முன்னோடி பரீட்சையில் ½ புள்ளி அதிகமாக எடுப்பினும் அது பெரிய விடயமாக தோன்றியது. போட்டி, பொறாமை அனைத்துமே அப்பொழுது எட்படிப்பார்த்தது. ஆண்டு ஆறில் ஆங்கில பிரிவில் கற்றது ஏதோ நாம் தான் வெள்ளைக்கார துரையென்று எண்ணவைத்தது. வருத்தப்படாத வாலிபர் சங்கமாயிருந்த எம்முன் மான் கராத்தே பயின்றவராய் வந்து நின்றார். இடுப்பில் கைகளை மடக்கிய படி நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வையுடன் வேலுப்பிள்ளை, முரளிதரன் ஆசிரியர். கோட் சட்டைக்குள் மட்டை வைத்து வந்த நாட்களுமுண்டு.

8 – 11 ஆண்டுகள் வரைக்குமான காலத்தில் தண்டித்த நாட்களை S.பார்த்தீபன் ஆசிரியரின் தன்மையில் எண்ணித்தான் பார்க்கவேண்டும். என்க்கு அவரிடம் தண்டனை பெறத்தான் ஆசை காரணம் ஒரு மாதம் வரை பூரண மன்னிப்பு தருவார். வெளியில் கிள்ளி அனுப்பாத நாட்களை சித்திர பூசனி ஆசிரியரால் உள்ளது என்று கூறக் கூற முடியாது. அன்னை போன்று அக்கறை கொண்ட Y.சுஹிர்தமலர் ஆசிரியர் அவர்கள், தோழியாய் பழகு வந்த கோமதி ஆசிரியர், எமக்கு ஆலோசகராக பணிபுரிந்த திருக்குமரநாதன் ஆசிரியர், மறவாத தமிழ் தந்த ஜெயபாலன் ஆசிரியர், ஆரம்பத்தில் கசத்தாலும் இறுதியில் இனிக்கத்தான் செய்கிற விஜயரட்ணம் ஆசிரியர். கானகுயிலாக கவியிசைக்கும் கவிதா ஆசிரியர், மென்மையிலும் மென்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வக்சலா ஆசிரியர், என்னை மட்டும் தண்டிக்கும் சோபிகா ஆசிரியர், கொல்லுவண்டா என்றுரைக்கும் வினோதினி ஆசிரியர், பக்கத்து வகுப்பானாலும் பாடம் தரும் ஹிமாசலா ஆசிரியர், இவர்களெல்லாம் விண்ணக தேவர்களின் கல்வி பிரதிபலிப்பு. சாதாரண தரத்திலான கனவான 11A வகுப்பு எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் கொட்டி கொடுத்தாலும் மீளவராது.
ஆரம்பத்திலேயே அடியுடன் ஆரம்பித்தது உயர்தர வகுப்பு ஜேம்ஸ் பான்டின் நீமேக்காக இருந்தது இவர் கண்டுபிடிக்கும் நுணுக்கமான தவறுகள் R.லிங்கநாதன் ஆசிரியர் ஒருநாளும் லீவு எடுக்கமாட்டாரா, இவருக்கு சகயீனம் வராத என்றல்லோ அன்று நினைத்தோம். வசந்தமாய் இருந்த எம்மை தந்தையாய், தோழனாய் தழுவி சென்றார் வசந்தகுமார் ஆசிரியர், கலகல பேச்சுடன் முகம் நிறைந்த மகிழ்வுடன் "தம்பி இன்றைக்கு படிப்பம்" என்று தினம் கூறும் A.ஜெகதீசன் ஆசிரியர். இறுதியில் வந்தாலும் தங்கமான குறிப்புக்களுடன் தேடி கற்பிக்கும் தனலஷ்மி ஆசிரியர் தனக்கென மரியாதையான ஓரிடத்தை எம் நெஞ்சில் பதிய வைத்தார். முதல் நாள் பழக்கத்திலே பல வருட உறவு போல் சந்தேகமே இல்லாமல் சந்தேகம் தீர்த்து வைப்பார் நித்தியா பரமெஸ்வரன் ஆசிரியர்.

நூற்றுக்கணக்கான ஆசிரியர்களில் ஞாபகத்தில் நிலைத்து நிற்கும் இவர்களை என்னவென்று நன்றி கூறுவது. மனம் விட்டு போனாலும் "தம்பி உங்களுக்கான இறுதி சலுகை இதுதான்" என்று இறுதிவரை மன்னித்த ரகுமோகன் ஐயா அவர்கட்கும் நன்றி கூறி விருப்பமுன்றி முற்றுப் புள்ளி வைக்கும் என் முதற் கட்டுரை.

மீண்டும் ஒரு ஜென்மம் வேண்டும் மீண்டும் மாலையணிந்து உட்பிரவேசிக்க உன்னதமான கலைவாணியின் கமலாசனமான இக் கல்லூரியின் புதிய மாணவனாய், பழைய மாணவனாக வேணும் ஆக வேண்டும் மீண்டும் சொர்க்க மண்ணை தொட்டுப்பார்க்க.

நன்றி
அதிக நேரம் எடுத்துக்கொண்ட
அன்பு நிறைந்த,
ந.துலக்ஷநாத்
13 Com A (2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியாவிடை

பிரிவொன்று சொல்லி
விடைபெறவில்லை
தொடரட்டும்
பயணம்என
விலகிச்செல்கிறேன்

விடியலற்ற நாட்களை
உன்னதமாய் பட்டியலிட்டு
விடியலை சபிக்க
விரும்பாமல் விலகுகிறோம்

உறவுகளே!
கண்ணிரில் கசங்கும் போது
எந்நீர் செந்நீரானது
என் இதய கடிகாரம்
முட்களை முட்களால்
நகர்த்தியது

மனம் ஓர்
மந்திரச்சாவி
தந்திரங்கள் பல
செய்து
சோகத்தை சுகமாக்கியது
வாழ்க்கையை பயணமாக்கியது

என் இதயங்களே
முள்ளான வேதனைகளை
முடுக்க வேண்டுமென
முற்றுப்புள்ளி
வைக்கின்றேன்
தொடரட்டும் பயணம் என
விலகிச்
செல்கிறேன்

G.தனுசன்
13 Arts - 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் போற்றுதும்

அஞ்சில் எமைய ளைத்து
அமுதனைய கல்வியினை
நெஞ்சில் நிறைக்கின்ற
நேர்த்தி எல்லாம் கற்றவரே!

அறிவு நீர் பாய்ச்சி
அகந்தைகளை அகற்றி
செறிவுடையோராய் எம்மை
செய் உழவர் நீங்களன்றோ!

எண்ணோடு எழுத்து என்னும்
இரு கண்கள் திறக்கின்ற
புண்ணிய பணி செய்யும்
சிற்பிவரும் நீங்களன்றோ!

அன்றாடம் எமை நாடி
அறிவு புகட்டும் உமை
இன்றின்றாள் எம் நெஞ்சில்
இறுதியாகப் புகழ்கின்றோம்!

உம் வாழ் நாள் முழுவதையும்
மாணவர் எமக்கு அழித்து
வீழ்நாள் இலா, கல்வி
விளைவிக்கும் நீர் வாழியவே

**Y.பிரகாஷ்**
**13 Arts - 2015**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Printed by
Maruthy
0772283282 Printers

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org